**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆவணி மாதம் 18 ம் நாள்

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் நாள் புதன்கிழமை

**இடை மனு எண்.11/2025**

**in**

**அசல் வழக்கு எண்.128/2018**

1. ராமசாமி ...**மனுதாரர் / வாதி**

//எதிர்//

1. கணேஷ கவுண்டர்
2. மாரிச்சாமி
3. பாலசுப்பிரமணியம்
4. லோகேஷ் குமார்
5. கௌதம்
6. பரிமளம்
7. வீ.ஆர். ரவிச்சந்திரா
8. சி. அண்ணாமலை ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சிவக்குமார், அவர்கள் ஆஜராகியும், 7 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வெங்கடாச்சலம், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுவின் திருத்தல் விபரத்தில் குறிப்பிட்டவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய கோரி கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). தாவா சொத்துக்களான க.ச.எண்.451/1 முதல் 451/6 வரையிலான சொத்துக்கள் மனுதாரர்/வாதிக்கு தனிப்பட்ட சொத்துக்களாக கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002 தேதியிட்ட கிரைய ஆவணங்களின் படி பாத்தியப்பட்டது. தாவா 4 வது பத்தியில் தாவா 'ஏ' அயிட்ட சொத்துக்கள் 451/1 முதல் 451/6 வரை உட்பிரிவாகி நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தின் படி மனுதாரர்/வாதியின் முன் உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு பின்னர் மனுதாரர்/வாதிக்கு கிரைய ஆவணங்களின் படி தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் அனுபவித்து வரும் சொத்துக்கள் என்று குறிப்பிட்டு தாவா தாக்கல் செய்துள்ளார்.

1.2). தாவா 'ஏ' அயிட்ட சொத்து விபரத்தில் மேற்படி க.ச.எண்.451/1 முதல் 451/6 சொத்துக்களின் விஸ்தீரணம் ஆகியவற்றினை மனுதாரர்/வாதி வழக்குரையில் குறிப்பிடாமல் விட்டுவிட்டார். மேற்படி சொத்துக்கள் மனுதாரர்/ வாதி பெயரில் பட்டா ஆகி உள்ள விபரத்தை எதிர்மனுதாரர்கள் மறுப்பதில்லை. மேற்படி 'ஏ' அயிட்ட விபர சொத்துக்களை குறிப்பிட்டு குறிப்பிடாத விபரம் வழக்கு விசாரணையின் போது தான் மனுதாரர்/வாதிக்கு தெரியவந்தது. மனுதாரர்/வாதி வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ தாவா 'ஏ' அயிட்ட விபரங்களை தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடாமல் இருக்கவில்லை. தாவா 'ஏ' அயிட்ட சொத்து விபரம் குறிப்பிட்டு இந்த திருத்தல் மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படபோவதில்லை. எனவே மனுதாரர்/வாதி வழக்குரையில் குறிப்பிட்ட சொத்துக்களை தெளிவாக குறிப்பிட்டு வழக்குரையில் சொத்து

விபரத்தை திருத்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1ம் எதிரமனுதாரர் எதிருரையாக ஏற்றுக்கொண்டதன் சுருக்கம்:**

2.1). மனுதாரரின் மனு பொய்யானது, மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிற ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். தாவா சொத்துக்களான க.ச.எண்.451/1 முதல் 451/6 வரையிலான சொத்துக்கள் மனுதாரருக்கு தனிப்பட்ட சொத்துக்களாக கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002 தேதியிட்ட கிரைய ஆவணங்களின் படி பாத்தியம் என்பதும் மேற்படி சொத்துக்களில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாத்தியமும் இல்லை என்பதும் முற்றிலும் பொய்.

2.2). மேலும் தாவா 'ஏ' அயிட்ட சொத்துவிபரத்தில் மேற்படி க.ச.எண்.451/1 முதல் 451/6 சொத்துக்களின் விஸ்தீரணம் ஆகியவற்றினை வழக்குரையில் மனுதாரர் குறிப்பிடாமல் விட்டுவிட்டார் என்பதும் மேற்படி சொத்துக்கள் மனுதாரரது பெயரில் பட்டா ஆகியுள்ள விபரத்தை எதிர்மனுதாரர்கள் மறுப்பதில்லை என்பதும் முற்றிலும் தவறு. உண்மையில் வருவாய்த்துறை பதிவேடுகள் தவறுதலாக உட்பிரிவு செய்துள்ளதாக இந்த எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே தங்களுக்கு தெரியவந்தவுடன், மேற்படி உட்பிரிவுகளை இரத்து செய்துவிட்டு புதியதாக பத்திரங்களின் அடிப்படையில் உட்பிரிவு செய்யக்கோரி கடந்த 2013ம் வருடத்திலேயே வருவாய்த்துறையினரிடம் உரிய மனு தாக்கல் செய்துள்ளார்.

2.3). மேலும் மேற்படி 'ஏ' அயிட்ட விபர சொத்துக்களை குறிப்பிட்டு குறிப்பிடாத விபரம் வழக்கு விசாரணையின் போதுதான் மனுதாரருக்கு தெரியவந்தது என்பதும் மனுதாரர் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ தாவா 'ஏ' அயிட்ட

விபரங்களை தாவா சொ்துதுவிபரத்தில் குறிப்பிடாமல் இருக்கவில்லை என்பதும் தாவா 'ஏ' அயிட்ட சொத்துவிபரம் குறிப்பிட்டு இந்த திருத்தல் மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படப்போவதில்லை என்பதும் வழக்குரையில் குறிப்பிட்ட சொத்துக்களை தெளிவாக குறிப்பிட்டு வழக்குரையில் சொத்து விபரத்தை திருத்துவது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்பதும் மேற்படி வழக்குரையை திருத்தம் செய்வதால் வழக்குமூலம் எதுவும் மாறுவதில்லை என்பதும் முற்றிலும் தவறு.

2.4). உண்மையில் மனுதாரருக்கு அனைத்து விபரங்களும் வழக்கு தாக்கல் செய்யும்போதே தெரியும். தற்போது வாதிகள் தரப்பு சாட்சியம் முடிந்து, பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணை நடந்துவரும் போது மனுதாரர்/ வாதி வழக்கில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவும் வருவாய்த்துறை பதிவேடுகள்தான் பத்திரங்களைவிட முக்கியமான ஆவணம் என்று இம்மன்றத்தில் வலியுறுத்தவும் தான் தாவாவில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று மனுதாரர் கோருகிறார். மேலும் மனுதாரரை இந்த பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யும்போது ஏற்பட்டுள்ள வாதிக்கு விரோதமான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையுமில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள வழக்குரை திருத்தங்கள் என்பது அசல் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் எதிரானது. அதன் காரணமாக இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. மேலும் இந்த மனு மிகுந்த காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

2.5). மேலும் பொதுவாக வருவாய்த்துறை பதிவேடுகளைவிட, சொத்து பாத்தியம் தொடர்பான ஆவணங்களே சட்டப்படி ஏற்புடைய ஆவணங்கள் என்று சட்டக்கோட்பாடு இருக்கும்போது மனுதாரர் வேண்டுமென்றே இந்த மனுவை தாக்கல் செய்து வருவாய்த்துறை பதிவேடுகள் தான் ஒரு சொத்திற்கு மிகவும்

முக்கியமானது என்று தவறாக முன்னிலைப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிதான் இந்த மனு. ஆதலால் இந்த மனுவும் வழக்குரையில் கோரியுள்ள திருத்தங்களும் சட்டப்படி ஏற்புடையதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3). 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள எதிருரையை 3 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுகொள்ளப்படும் எதிருரையின் சுருக்கம்:**

3.1). மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது பொய்யானது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகி தங்களது எதிர்வழக்குரைகளை தாக்கல் செய்து முடித்தத பின்பு, இந்த வழக்கின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, வாதி தரப்பில் வாதியும், மேலும் வாதியின் தரப்பில் ஒரு சாட்சியும் PW.1 மற்றும் PW.2 ஆக விசாரிக்கப்பட்டு, அந்த சாட்சிகள் பிரதிவாதிகள் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர் அவரது தரப்பில் மேலும் தனக்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை என தெரிவித்ததால், அதன் பின்பு மேற்படி வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகளை விசாரிக்க வாய்தா போடப்பட்டு மேற்படி 1. 2 பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி DW.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்களது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு தற்பொழுது மேற்படி வழக்கானது குறுக்க விசாரணைக்கு வாய்தா போடப்பட்டது.

3.2). மேற்படி வழக்கின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, வாதிகள் தரப்பின் முழுமையாக சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பகுதி சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு, மேற்படி பிரதிவாதிகளின் தரப்பு சாட்சி விசாரணைகள் நிறைவடைய இருக்கும் நிலையில் இந்த தாவா வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி மனுதாரர் மனு செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

3.3). மனுதாரர் வாதி தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தான் இந்த தாவா வழக்குரையில் க.ச.நெ.451/6 ல் பு.ஏ.3.73 ல் பு.ஏ.0.87 ½ எனவும், க.ச.நெ.451/6 ல்

பு.ஏ.3.73 ல் பு.ஏ.2.85 ½ எனவும், க.ச.நெ.451/8 ல் பு.ஏ.0.17 ல் பு.ஏ.0.06 எனவும், க.ச.நெ.451 ல் பு.ஏ.9.83 ல் பு.ஏ.0.73 1/4, பு.ஏ.0.25, பு.ஏ.0.86 எனவும், க.ச.நெ.451/3 ல் பு.ஏ.0.43 ¼ எனவும், க.ச.நெ.451/4 ல் பு.ஏ.0.19 ½ எனவும், க.ச.நெ.451/8 ல் பு.ஏ.0.17 ½ ல் பு.ஏ.0.04 எனவும், க.ச.நெ.451/7 ல் பு.ஏ.0.22 ல் பு.ஏ.0.05 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.4). மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலை எண்கள், விஸ்தீரணம், செக்குபந்தி ஆகியவைகள் அடங்கிய சொத்து விவரத்தை தான் வாதி இந்த தாவாவில் 'A' அயிட்ட சொத்துக்களாக குறிப்பிட்டு இந்த தாவாவை தாக்கல் செய்து உள்ளார். இந்நிலையில், இந்த மனுவை தாவா வழக்குரை 'A' சொத்து விவரத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவைகளை நீக்கிவிட்டு கீழ்கண்டவாறு உள்ள சொத்து விவரத்தை சேர்க்குமாறு கோரியுள்ளார். அவை

| வ.எண் | க.ச.எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1. | 451/1 | 0.10.00 |
| 2. | 451/2 | 0.30.50 |
| 3. | 451/3 | 0.17.50 |
| 4. | 451/4 | 0.08.00 |
| 5 | 451/5 | 0.36.00 |
| 6. | 451/6 | 1.51.00 |
| மொத்தம் | | 2.53.00 |

3.5). மனுதாரர் அவரது சொத்துரிமை ஆவணங்களான வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிடாத/சொல்லப்படாத காலை எண்களையும், விஸ்தீரணத்தையும் புதிதாக இந்த தாவா சொத்து விவரத்தில் உள்ளீடு செய்ய முயற்சி செய்கிறார். மனுதாரர் சொத்து விவரங்களில் ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால் முதலில் அவர் அவரது சொத்துரிமை ஆவணங்களான வா.தா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் முறையாக திருத்தம் செய்திருக்க வேண்டும். அதுவும்இந்த

மனுதாரர் கிரையம் பெற்றதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் செய்திருக்க வேண்டும். தற்பொழுது மனுதாரர் கிரையம் பெற்று சுமார் 25 மற்றும் 23 ஆண்டுகள் கழித்து மனுதாரரின் சொத்துரிமை ஆவணங்களில் திருத்தம் எதுவும் செய்ய முடியாது.

3.6). மனுதாரர் தனது வழக்குரையை திருத்தம் செய்யக்கோரும் சொத்து விபரம் தொடர்பாக எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் மனுதாரர் சொத்து விபரத்தில் அளவுகளை ஏக்கரில் கூறிவிட்டு தற்பொழுது திருத்தப்பட்ட சொத்து விபரத்தை ஹெக்டேரில் தெரிவித்துள்ளார். இந்த எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு 5 ஆண்டுகள் கழித்து அசல் வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய காலம் கடந்த இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு புதிய வழக்கு/ சொத்து விவரத்தை உள்ளீடு செய்யும் முயற்சியாகும். மேலும் இந்த மனு அனுமதிக்கப்பட்டால் வழக்கின் தன்மையை மாற்றிவிடும். மேலும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த திருத்தம் அனுமதிக்கப்பட்டால் முற்றிலும் இந்த வழக்கு புதிய வழக்காக மாற்றப்படும். பொதுவாக ஒரு வழக்கில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுவிட்டால், அந்த வழக்கில் பிராதை திருத்தம் செய்ய அனுமதிக்க முடியாது. எனவே இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

5). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு :-**

6.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு அட்டவணை சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், விளம்புகை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6.2). மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களான க.ச.எண்.451/1 முதல் 451/6 வரையிலான சொத்துக்கள் மனுதாரர்/வாதிக்கு தனிப்பட்ட சொத்துக்களாக கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002 தேதியிட்ட கிரைய ஆவணங்களின் படி பாத்தியப்பட்டது. தாவா 4 வது பத்தியில் தாவா 'ஏ' அயிட்ட சொத்துக்கள் 451/1 முதல் 451/6 வரை உட்பிரிவாகி நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தின் படி மனுதாரர்/வாதியின் முன் உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு பின்னர் மனுதாரர்/வாதிக்கு கிரைய ஆவணங்களின் படி தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் அனுபவித்து வரும் சொத்துக்கள் என்று குறிப்பிட்டு தாவா தாக்கல் செய்துள்ளார்.

6.3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் வருவாய்துறை பதிவேடு தவறாக உள்ளது என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு ஆவணங்களில் குறிப்பிடாத காலை எண்களையும், விஸ்தீர்ணங்களையும் புதிதாக தாவா சொத்து விபரத்தில் உள்ளீடு செய்ய முயற்சி செய்கிறார்கள் என ஆட்சேப்பிக்கப்பட்டுள்ளது.

6.4). தாவா சொத்துக்களான க.ச.எண்.451/1 முதல் 451/6 வரையிலான சொத்துக்கள் வாதிக்கு கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002 தேதிய ஆவணங்களின் படி பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது. தாவா 'ஏ' அயிட்ட சொத்துக்கள் க.ச.451/1 முதல் க.ச.451/6 வரை உட்பிரிவாகி நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் படி மனு உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு பின்னிட்டு கிரைய ஆவணங்கள் படி மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக மனுதாரர் பெயரில் புல

எண்.451/1 முதல் 451/6 சிட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 'ஏ' அயிட்ட சொத்து விபர சொத்துக்களை வழக்குறையில் குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளது.

6.5). வாதி தரப்பில் மேற்கண்டவாறு திருத்தம் கோரி மனுதாக்கல் செய்துள்ள நிலையில், வாதியின் வழக்கை நிருபிக்கும் சுமையானது வாதியையே சாரும். வாதி தரப்பு திருத்தம் அனுமதிக்கும் பட்சத்தில் வாதிதான் வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை தகுந்த ஆவணங்கள் மூலம் நிருபிக்க வேண்டும். வழக்கு சொத்தில் வாதியின் உரிமை மற்றும் அனுபவம் நிருபிக்கப்பட்டுள்ளதா என்பது அசல் வழக்கு விசாரணையின் முடிவில் தான் தெரியவரும்.

6.6). எனவே அசல் வழக்கில் முழுமையான தீர்வு காண வேண்டி வழக்கின் சொத்து விவரத்தை திருத்தம் செய்ய மேற்படி மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி மனுவானது ரூ.1000 செலவு தொகையை ஒரு வார காலத்திற்குள் எதிர்மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**மனுதாரர்/வாதியால் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.1000/- செலவுத் தொகை 10.09.2025ம் தேதிக்குள் கொடுக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். செலவுத் தொகை கொடுக்க தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க வாய்தா 10.09.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-** - இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.01.2025 | பட்டா எண்.2288, மோப்பிரிபாளையம் | பதிவிறக்க நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** - இல்லை

Sd/M.Santhosham
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.No.11/2025 in
OS.128/2018 in
Dated:03.09.2025
DMC, Sulur.